// திராவிடன்

ஆசிரியர் : என்.வி.என்.



அரசியல் பண்பாட்டின் ஆசானே வாழ்க!
அறவழி கற்பித்த அண்ணலே வாழ்க!
தென்னகத்தை மீட்கவந்த தலைவா வாழ்க!
எண்ணற்றதம்பிகளின் அண்ணாவே வாழ்க!

14—9—63
10 பக்கங்கள்

வார இதழ்

16 காசு.

# தலையங்கம்

மலர். 17. 14—9—63 மாலை 7

## தங்கக் கட்டுப்பாடு!

—)—●—(—

[என். வி. என்.]

காங்கிரஸ் கட்சியின் சீர்குலைவைச் சரிசெய்ய காமராசர் அதிசயத் திட்டம் ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டதாகவும், அதற்கேற்ப மாநில ஆட்சிபீடங்களின் சில முதலமைச்சர்களும், மத்திய ஆட்சி பீடத்திலிருந்து சில அமைச்சர்களும் பதவிகளிலிருந்து வெளியேறி வரும் படலத்தை நாடு அறிந்திருக்கிறது.

அமைச்சர்கள் பதவிகளிலிருந்து வெளியேறுவதும், மீண்டும் அதே பதவிகளில் ஒட்டிக்கொள்வதென்பதும் ஆட்சிபீடத்தை தங்களின் சொந்த சொத்து என்ற ஏகாதிபத்ய ஆணவம் கொண்டவர்களின் செயல் என்பதை ஜனநாயக உள்ளம் படைத்தவர்கள் ஒப்புக்கொள்வார்கள். காங்கிரஸ் மேலிடத்தாரின் இதுபோன்ற செயல்களால் காங்கிரஸ் கட்சி பிழைக்குமா அல்லது அவர்களது ஆட்சி காலம்தான் ஒழுங்குற முடியுமா என்பதைப்பற்றி அவர்களுக்குள்ளாகவே இப்போது கருத்துவேற்றுமையும், குழப்பமும் ஏற்பட்டிருப்பதால் நாம் அதைப்பற்றி மேலும் விளக்க விரும்பவில்லை.

ஆனால், ஏழை—நடுத்தர மக்களிடமிருந்து வரியின் பேராலும் மற்றவைகளின் பேராலும் கசக்கிப்பிழிந்து வசூலித்துவரும் வரிப் பணத்திலிருந்து பலகோடி ரூபாய்களைத் தேர்தல் வகைக்கு என்று செலவிட்டு உருவாக்கப்படும் ஒரு ஜனநாயக அமைப்பை, ஆட்சியை தங்கள் கட்சியின் ஆசாபாசத்திற்காக எடுத்தேன்—கவிழ்த்தேன் என்ற முறையில் அமைச்சர்கள் விலகுவதும் மீண்டும் பதவி ஏற்பார்கள் என்பதும் வடிகட்டிய அநீதியாகும் என்பதை பண்டித நேருவும், காங்கிரஸ் மேலிடமும் இனியாகிலும் உணர்ந்து நடக்க வேண்டும்.

இடைத்தேர்தல்களில் காங்கிரசுக்குத் தோல்வி ஏற்பட்டதென்றால், எந்தெந்த இலாக்காக்களுக்கு யார் யார் அமைச்சர்களாகயிருக்கிறார்கள், அல்லது மாநிலங்களுக்கு யார் யார் முதலமைச்சர் என்ற வித்தியாசத்தால் அல்ல. யார் அமைச்சர்களாகயிருந்தாலும் காங்கிரஸ் கட்சியினர் தங்களின் போக்குபடி அதாவது அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பின் முடிவுபடியே ஆட்சிசெய்து வருகிறார்கள். எனவே ஆளும்கட்சியின் நடவடிக்கைகளைப் பொறுத்தே மக்களின் ஆதரவும் அவர்களுக்கு பெருகுவதும் குறைவதுமாக இருக்கும்.

அதன்படி பார்த்தால் பொதுத்தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் ஆட்சியினர் செய்துள்ள ஜனநாயக விரோதமான செயல்கள் ஏராளம்! ஏராளம்!

குறிப்பாக, தங்கக் கட்டுப்பாடு உத்திரவு; கட்டாய சேமிப்புத் திட்டம், விலைவாசி ஏற்றம், வரிஉயர்வு, இந்தி ஆதிக்கம் போன்ற பல அநீதிகளைத் தொடர்ந்து மிகத்துணிச்சலாக செய்துள்ளனர் என்பதை நாம் எடுத்துக்கூறினால் காங்கிரஸ் கட்சியினருக்கு கோபம் பொத்துக்கொண்டு வருகிறது. ஆனால் இப்போது காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களே இந்த அநீதிகளைச் சுட்டிக்காட்டி அவைகளையெல்லாம் உடனடியாக தகர்த்தெறியவேண்டும் என்று பண்டித நேரு அவர்களிடம் வலியுறுத்திவருவதாகச் செய்திகள் அறிவிக்கின்றன.

குறிப்பாக, கடந்த சில நாட்களாக டெல்லிப் பாராளுமன்றத்தின் வாயிலில் நின்று பொற்கொல்லர்கள் தங்களின் மனவேதனையை வெளிப்படுத்திவருவதையும், அவர்களின் வாழ்வு சீர்குலைந்து போயிருப்பதையும் பண்டித நேரு இந்தச் சமயத்திலாகிலும் மனமார உணர்ந்து நடக்கவேண்டும். ஏதோ சில அமைச்சர்களை வெளியே அனுப்புவதும், சிலரைப் புதிய அமைச்சர்களாக ஆக்குவதுமான வித்தைகளில் செலுத்தும் நேரத்தை இடைத்தேர்தல்களில் மக்கள் அளித்த தீர்ப்புக்கு மதிப்பளித்து கடந்த ஒன்றரை ஆண்டுகளாகக் காங்கிரஸ் செய்துள்ள தவறுகளைத் திருத்திக்கொள்ள முனைவார்களானால் அது விவேகமுள்ள—பயன்தரத்தக்க செயலாகும்.

தோழர். மொரார்ஜி தேசாய்க்கு பதிலாக தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி நிதியமைச்சராக பொறுப்பேற்றதால் மட்டும் பொற்கொல்லர்கள் வாழ்வு சீர்பட்டுவிடாது. பொற்கொல்லர்களும், பொதுமக்களும் வீண் தொல்லைகளுக்கு ஆளாகாதவகையில் தங்கக் கட்டுப்பாடு உத்திரவிலுள்ள குறைகளை அறவே அகற்ற உடனடியாக முனைய வேண்டுகிறோம்.

அதுபோலவே கட்டாய சேமிப்புத்திட்டம், விலைவாசி ஏற்றம், வரி உயர்வு, இந்தித்திணிப்பு ஆகியவைகளிலுள்ள தவறுகளையும் இந்திய அரசு உடனடியாக திருத்திக்கொள்ள முனையவேண்டும்.

இதன் மூலமாகத்தான் காங்கிரஸ் ஆட்சி மீதமுள்ள மூன்றரை ஆண்டுகளுக்காகிலும் தொடர்ந்து நடைபெற்று வரலாமேயன்றி அமைச்சர்களை மாற்றுவதால் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. அதற்கு பதிலாக காங்கிரஸ் மேலும் மேலும் சீரழிவுக்கு ஆளாகி மக்களால் வெறுக்கத்தக்க இழிநிலைக்கும் ஆளாகிவிடுமென்பதை பண்டித நேருவாகிலும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

○

## இந்தி எதிர்ப்பு வாரம் நாடெங்கும் கொண்டாடுவீர்!

——0——

### போராட்டக் குழுத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி வேண்டுகோள்!

சென்னை — அறிவகத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழு எடுத்த முடிவுக்கிணங்க அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளாகிய செப்டம்பர் திங்கள் 15-ம் நாள் முதல் 22-ம் நாள் முடிய நாடெங்கும் இந்தி எதிர்ப்பு வாரம் நடத்தி இந்தி ஆதிக்கத்திற்கு எதிராக எழுந்துள்ள பெரும் சக்தியை எடுத்துக் காட்டுமாறு, கழகத் தோழர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

ஊர்வலங்கள்;

பொதுக்கூட்டங்கள்;

கலை நிகழ்ச்சிகள் வாயிலாக, இந்திப் பேரபாயத்தை மக்களுக்கு விளக்கி, தி. மு. கழகம் நடத்தும் இந்தி எதிர்ப்புப் போராட்டதிற்கான ஆதரவைத் திரட்டுகிற முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுவரை பட்டியல் தாள்களில் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளாதவர்கள்: இந்தி எதிர்ப்பு வாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு பட்டியலில் தங்களை இணைத்துக்கொள்ள வேண்டப் படுகிறார்கள்.

இந்தி எதிர்ப்பு வார முடிவுக்குள் அந்தந்த மாவட்ட—மாநில அமைப்புக்கள் தங்களிடம் சேர்ந்துள்ள பட்டியல் தாள்களின்படி ஒன்றினைத் தங்கள் அமைப்பில் வைத்துக்கொண்டு; உடனடியாகப் பட்டியல் தாள்களை இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழுவுக்கு அனுப்பிவைக்க வேண்டப்படுகின்றன.

இந்தி எதிர்ப்பு வாரத்தில் நாடெங்கும் ஒட்டப்படுவதற்கான தமிழ்ச் சான்றோர்களின் பொன்மொழிகள் எல்லா வட்டக் கழகங்களுக்கும் பெருநகரக் கிளைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. தக்க இடத்தில் அவைகளை ஒட்டிப் பாதுகாத்துப் பயன்படுத்துமாறு கிளைக் கழகத்தினரையும் துணை மன்றத்தினரையும் கேட்டுக் கொள்கிறேன்.

## அடுத்த வாரம்!

——(ஃ)——

ஃ அண்ணாவின் சொற்பொழிவு!

ஃ அண்ணாவுடன் நான்!—என்.வி.என்.

ஃ அஞ்சாநெஞ்சன் பதில்!

ஃ திரையுலகில் சுந்தரம்!—சேரன்தம்பி

ஃ இந்தி எதிர்ப்பு வார நிகழ்ச்சிகள்!

முதலியன 21—9—63 'திராவிடன்' இதழில் வெளிவரும்.

# அண்ணாவுடன் நான்

### என். வி. என்.

## தி. மு. க. துவக்கம்

○

23

திராவிட இயக்கப் பணியில் பெரியார் அவர்களின் தொடர்பிலிருந்து விலகிய அறிஞர் அண்ணா அவர்களும் மற்ற தோழர்களும் மேற்கொண்டு என்ன செய்வது என்பதைப்பற்றி அவ்வப்போது கூடிப் பேசி கலந்து விடுவதென்ற நிலைதான் இருந்ததே யன்றி திட்டவட்டதான முடிவு ஒன்றும் எடுக்கப் படவில்லை. இவ்வாறு நான்கைந்து திங்கள்கள் கடந்து விட்டன. அனைவரும் அறிஞர் அண்ணா அவர்களின் யோசனையையும் எண்ணத்தையும் எதிர் பார்த்திருந்தோம்.

அண்ணா அவர்கள் ஆர அமர சிந்தித்த பிறகே தக்க முடிவெடுக்க வேண்டுமென்று கூறி வந்தார். இதனால் சற்று மனச் சோர்வுற்ற தோழர்கள் என்னைக் கலந்து பேசாமலும், நான் சென்னையில் இல்லாத சமயத்திலும் திராவிடன் இதழில் "அண்ணா அவர்கள் உடனே ஆவன செய்யாவிட்டால் நான், அடுத்த வாரம் ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டுகிறேன் என்பதாக. என் பெயரால் விளம்பரம் செய்திருந்தார்கள்." வெளியூரிலிருந்த நான் திராவிடன் இதழைப் படித்ததும் திடுக்கிட்டேன். உடனே சென்னை வந்தேன். அவ்வாறு அறிக்கை வெளியிட்டதற்குக் காரணமாயிருந்தவர்கள், தோழர்கள் கே. கோவிந்தசாமி காஞ்சி மணிமொழியார் என்று தெரிய வந்தது. உடனே தோழர் கே. கோவிந்தசாமி இல்லம் சென்று மிகவும் கோபித்துக்கொண்டேன்.

ஆனால் அவரோ நம் இயக்கத்தின் வளர்ச்சிக்கு உங்களைப் போன்றவர்கள் சில பழிபாவங்களை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று சமாதானம் கூறினார். என்னைக் கலந்து பேசாமல் அதுவும் திராவிடன் இதழில் செய்தி வெளியிட்டமைக்கு வருத்தம் தெரிவித்தார்.

எனக்கிருந்த அச்சமெல்லாம் இந்த அறிக்கையை அண்ணா அவர்கள் கண்டு எவ்வளவு மனவேதனைப் படுவார். வீணாக இது போன்ற நெருக்கடிகளை எனக்கு எனது நெருங்கிய நண்பர்களே உண்டாக்கி விட்டார்களே என்று வேதனைப் பட்டேன்.

அதற்கேற்றதைப் போல அடுத்த நாள் காஞ்சியிலிருந்து சென்னை வந்த தோழர். சி. வி. எம். அண்ணாமலை, அண்ணா அவர்கள் மிகவும் வருத்தப்பட்டதாகவும், நீங்கள் இதுபோல அறிக்கை தரலாமா யென்றும் கேட்டார். அவருக்கு உண்மையை விளக்கினேன். அது மட்டுமல்ல, தோழர் கே. கோவிந்தசாமியின் இல்லத்திற்கு தோழர் சி. வி. எம். அவர்களை அழைத்துச் சென்று மேலும் விவரம் அறியச் செய்தேன். அப்போதுதான் தோழர் கே. கோவிந்தசாமி அவர்களுக்கு என் பேரால் அவரும் மற்ற நண்பர்களும் விடுத்த அறிக்கையால் எனக்கு எவ்வளவு தொல்லை ஏற்பட்டிருக்கிறது என்பதை முழுதும் உணர்ந்தார்.

தோழர் சி. வி. எம். அண்ணாமலை, காஞ்சி சென்றதும் அண்ணா அவர்களிடம் உண்மையைச் சொல்லி யிருக்கிறார். என்றாலும் அண்ணா அவர்களுக்கு முழு நம்பிக்கை ஏற்படவில்லை.

அடுத்து அண்ணா அவர்கள் சென்னை வந்தார்கள். நான் வழக்கம் போல அவரைச் சந்திக்கச் சென்றேன். என்னிடம் சரியாகக் கூட பேசவில்லை.

அண்ணா அவர்களுக்கு அவருடனிருந்து பணியாற்றும் என்னைப் போன்ற தோழர்கள் மீது கோபம் வருமானால் யார் மீது கோபம் ஏற்படுகிறதோ அவர்களுக்கு அவர் கொடுக்கும் தண்டனை எத்தனை மணி நேரம் நேரில் உட்கார்ந்தாலும் பேசாமலிருப்பதுதான். அதே சமயத்தில் மற்ற தோழர்களுடன் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருப்பார். இதைவிட அடிகூட பட்டுக் கொள்ளலாம். ஆனால் இது அடிக்காமல் கொல்லும் தண்டனையல்லவா! எனக்கு வேதனைத் தாள முடியவில்லை. எல்லாம் இந்தக் கோவிந்தசாமி, மணிமொழியார் இவர்களால் ஏற்பட்ட தொல்லையல்லவா! இந்த நேரத்தில் அவர்களாகிலும் அண்ணாவிடம் விவரம் தெரிவிக்க வேண்டாமா! சே! இவர்களும் நண்பர்களா என்று மனச் சோர்வடைந்தேன்.

அதே சமயத்தில் தோழர் கே. கோவிந்தசாமி அண்ணாவைச் சந்திக்க வந்தார். அவருடன் மிகத் தாராளமாகப் பேசினார் அண்ணா! தோழர்களே என் மனம் எப்படி யிருக்கும், நீங்களே யோசித்துப் பாருங்கள். யார் என்னையும் அறியாமல் என்னைக் கேட்காமல் அதுவும் நான் நடத்தும் திராவிடன் பத்திரிகையில் என் பெயரால் அறிக்கை வெளியிட்டார்களோ அவர்களில் ஒருவரிடம் அண்ணா பேசுவதும், என்னிடம் கோபங் கொண்டிருப்பதும் எவ்வளவு கொடுமையாயிருந்திருக்கும்! நான் கண் கலங்கிப் பேசாமலிருந்தேன்.

பிறகு தோழர் கே. கோவிந்தசாமி, திராவிடன் இதழில் வெளி வந்த அறிக்கையின் உண்மைகளை எடுத்துக் கூறினார். அதை அண்ணா அவர்கள் சரியாகக்கூட கேட்க விரும்பாமல் குறுக்கிட்டு, நடராசன்தான் ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டுவதாக அறிக்கை விட்டிருக்கிறாரே! செய்யட்டும், நான் சாதாரணமானவன், என்னால் இதெல்லாம் முடியாது என்று கோபத்தோடு பேசினார்!

உடனே தோழர். கோவிந்தசாமி, நடந்த உண்மையைத் திட்டவட்டமாகவும், விளக்கமாகவும் கூறினார். தோழர். நடராசனுக்கு இதுபற்றி ஒன்றும் தெரியாது. அவர் பேரால் நாங்கள் அறிக்கை வெளியிட்டதற்குக்கூட காரணம், விரைவில் நீங்கள் ஏதாவது எங்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்ற ஆர்வத்தால் தானேயன்றி, உங்களைத் தவறாக எண்ணியல்ல. அந்த அறிக்கைக்காக நான் உங்களிடமும், நடராசனிடமும் மனமார வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன், நீங்கள் நடராசன் மீது கோபிப்பதில் துளிகூட நியாயமே யில்லை. அதில் தவறிருந்தால் நீங்கள் கொடுக்கும் தண்டனைக்கு ஆளாக வேண்டியவர்கள் நானும் மணிமொழியாரும்தான் என்று உருக்கமுடன் கூறினார்.

இதற்கும் பிறகுதான் அண்ணா அவர்களுக்கு ஒருவாறு ஆறுதல் ஏற்பட்டது. உண்மையும் தெரிய வந்தது. உடனே என்னிடம் வழக்கம்போல கேலி செய்ய ஆரம்பித்தார். எனக்கு ஏற்பட்ட கோபத்திற்கு அளவே யில்லை. காலையிலிருந்து ஏறத்தாழ எட்டு மணி நேரம் நம்மை அநியாயமாக சித்திரவதை செய்துவிட்டு இப்போது பேசுகிறாரே யென்று!

உடனே, பெரியாரை விட்டு விலகிய எல்லாத் தோழர்களுக்கும் அழைப்பு அனுப்புவதென்று முடிவு செய்தார் அண்ணா. அடுத்த வாரமே ஆலோசனைக் கூட்டத்தை விரிவாக நடத்துவதென்றும் அக்கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளுக் கேற்ப தொடர்ந்து பணியாற்றுவதென்றும் கூறினார் அண்ணா.

அதுபோலவே உடனே அனைவருக்கும் அழைப்பு அனுப்பப் பட்டது. அடுத்த வாரம் சென்னையில் பவழக்கார வீதியிலுள்ள திருமண மண்டபத்தில் விரிவான முறையில் விவாதம் நடந்தது. கே. கே. நீலமேகம், ஜி. பி. சோமசுந்தரம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உள்பட தமிழகத்தின் பல மாவட்டங்களிலிருந்தும் முக்கிய தோழர்கள் வந்திருந்தனர்.

அந்த ஆலோசனைக் கூட்டத்தின் முடிவுக்கேற்பவே 1949-ம் ஆண்டு செப்டம்பர் 17-ம் நாளன்று சென்னையில் ராபின்சன் பூங்காவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழா இனிதே நடைபெற்றது.

விழா நடந்துக் கொண்டிருக்கும்பொழுது தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் என்னைத் தனியாக அழைத்து நாங்கள் துணிந்து 'திராவிடன்' இதழில் உங்கள் பெயரால் அறிக்கை வெளியிடவில்லை யென்றால் இவ்வளவு விரைவில் இயக்க வளர்ச்சிக்கான நல்லதோர் முடிவு கண்டிருக்க முடியுமா? என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

அதற்காக நான்தான் கிடைத்தேனா ஏன் அதை மீண்டும் நினைவூட்டுகிறீர்கள் என்று கூறினேன்.

உடனே அண்ணா அவர்கள் இரண்டு பேரும் என்ன ரகசியம் பேசுகிறீர்கள் என்று கேட்டார்.

நீங்கள் எனக்கு விளைவித்த கொடுமை பற்றி என்றேன்.

உடனே அண்ணா அவர்கள் விவரம் அறிந்துகொண்டு சிரித்தார்! திராவிட முன்னேற்றக் கழக துவக்க விழா சிறப்புற நடந்தேறியது. அதற்காக நம் தோழர்கள் அனைவரும் எடுத்துக்கொண்ட முயற்சி குறிப்பிடத்தக்கதாகும்.

(தொடரும்)

# தலைவன் திருநாள்!

அண்ணா!

அந்தச் சொல் ஏன் இத்தனை தேனாய் இனிக்கிறது?

அதிலே புதையுண்டு கிடப்பது எது?

முத்தமிழின் சுவையா?

மூவேந்தர் சிறப்பா?

முக்கனியின் இனிப்பா?

பின் ஏன் லட்சக்கணக்கான இதயங்கள் 'அண்ணா' என்று சொல்லும்போதே மணக்கின்றன? பெருமையால் பூரிக்கின்றன?

மகிழ்வு துள்ளும் நெஞ்சங்கள் 'அண்ணா வாழ்க!' என்று முழங்குகின்றனவே ஏன்?

தலைவனை வாழ்த்துவதிலும், தலைவனுக்கு விழா நடத்துவதிலும் தமிழக மக்களுக்கு இத்தனை மகிழ்ச்சி ஏன்?

தூங்கிக் கிடந்த தமிழனை தூக்கி நிறுத்திய மேதை அந்த மேலோன். நாடும் மொழியும் நமதிருவிழிகள் என்று அறிவூட்டிய அண்ணல்!

"ஆமையாய் — ஊமையாய் அடங்கி வாழ்வது நன்றா? தென்னவர்—நம் முன்னவர் தொன்மைப் புகழை நினைத்துப் பார். நீ ஆண்ட இனத்தின் பெருமைமிக்க வழிவந்தவன்! நீயா முடங்கிப் போய் மூலையில் கிடப்பது எழு! விழி!" என்று தோய்ந்துப் போன தென்னகத்து மக்களை புலிநிகர் மாந்தராய் மாற்றிய போர் மறவன்! அதனாலே அண்ணாவானார்!

சமுதாயத்தின் புரையோடிப் போன முடை நாற்றம் போக சமுதாயத்தில் மலிந்து கிடக்கும் பிணியைத் தீர்த்த புரட்சித் தலைவன்! அதனாலே அவர் அண்ணாவானார்!

சுதந்திரம் நமது பிறப்புரிமை—அதை அடைந்து தீர்வது நம் கடமை! என்று சங்கநாதம் முழக்கும் முன்னேற்றக் கழகம் கண்ட தீரர்! விடுதலை வீரர்! அதனாலே அவர் அண்ணாவானார்!

அரசியல் வேறு — குடும்பம் வேறு என்ற பேதம் நீக்கி, அரசியலிலும் குடும்பப் பாசத்தை உண்டாக்கிய அறநெறியாளர்! அதனாலே அவர் நம் குடும்பத்து அண்ணாவானார்!

"மேதைகள் பிறக்கிறார்கள்; உண்டாக்கப்படுவதில்லை" என்றான் அறிஞன் ஒருவன்.

உண்மைதான்!

காஞ்சிக் கருவூலம் ஒரு பிறவி மேதை!

அவர்தம் இதயம் ஒரு மலர்த் தோட்டம்! அதில் எத்தனை வகை மலர்கள்!

உலகம் எத்தனையோ பேரை அறிஞர் என்று அழைக்கிறது. எல்லோரும் அறிஞர்களா? ஆராய்ச்சி விரியும்; வேண்டாம்!

ஆனால் அண்ணா?

அவருக்குத் தெரியாத உண்மைகள் ஏது?

ஏன்?

பேரறிஞர் அவர்!

இத்தரை மீதில் எத்தனை சுகங்கள் என்று மயங்குவோன் அறிஞனல்ல! அவை அத்தனையும் உலகத்தின் பொது என்பவனே அறிஞன்! அதனாலே நம் அண்ணா அறிஞர் ஆனார்!

தமிழுக்கு இவரால் சிறப்பா? இவருக்குத் தமிழால் சிறப்பா? என்று திகைப்பர் அவரது சொற்பொழிவைக் கேட்போர்! எல்லோரும்தான் பேசுகிறார்கள். ஆனால் தமிழின் இனிமை—அதன் சுவை அவர் பேசும்போது தான் நமக்குத் தெரிகிறது!

## கோவை. க. இரத்தினம்

அந்தர லோகத்தில் சுந்தர மாளிகை அமைத்து, அதைத் தன் இன்ப புரியாக்கிக் கொள்ள எண்ணுபவன் அறிஞனல்ல! இந்நில மாந்தர் வாழ்வில் புத்தொளி பரவிட உழைப்பவர் அண்ணா. அதனாலே அவர் பேரறிஞர் ஆனார்!

காலத்தைக் கடந்தவன் நான் எனப் பேசுவோன் என்றும் அறிஞனல்ல! மெய் ஞாலத்தை உணர்ந்தவன் எவனோ அவனே அறிஞனாவான்! அதனாலே நம் அண்ணா அறிஞர் ஆனார்!

அண்ணா ஆங்கிலத்தில் பேசினால் அந்த அழகு நடையில் ஆங்கிலேயரும் மயங்குவர்!

எந்த ஒரு துறையை எடுத்துக் கொண்டாலும் சரி, அத்துறையை தன் சொந்தமாக்கிக் கொள்ளும் தனித் திறன் படைத்தவர் நம் அண்ணா! இல்லையேல் இன்றைக்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு கண்ணீர்த் துளிகளுடன் திராவிடர் கழகத்தை விட்டு வந்தவர் இந்தக் குறுகிய காலத்தில் முன்னேற்றக் கழகத்தை எழில் மாளிகையாக்கியிருக்க முடியுமா? மாற்றாரும் பொறாமை கொள்ளும் வளர்ச்சியைக் கொண்டிருக்க முடியுமா?



பிரச்சினைகளை நம் அண்ணன் அணுகும் முறையே அலாதி தான். பொதுநல வாதிகள் ஒவ்வொருவரும் அறிந்து வைத்துக் கொள்ள வேண்டிய அரிய பாடமது. முக்கிய பிரச்னைகளில் முடிவு காண முடியாது நாம் குழம்பித் தவித்துக் கொண்டிருப்போம். ஆனால் அண்ணனின் உள்ளமோ நீண்ட நேரத்திற்கு முன்பே வழிவகை கண்டு வைத்திருக்கும். ஆனால் தன்னுடைய முடிவைவிட சிறந்த முடிவு எவர் வாயிலிருந்தாவது வராதா என்று ஆவலோடு காத்திருப்பார் அண்ணன். நாம் முடிவுக்கு வரவில்லையானால் 'இப்படிச் செய்தால்...' என்று தன் எண்ணத்தை வெளியிடுவார். அடடா! இந்த முடிவு நமக்கெல்லாம் ஏன் தோன்றவில்லை என்று நாம் விழிப்போம்! இத்தனை சுலபமான வழி இருக்கும்போது இத்தனை நேரம் மண்டையைக் குழப்பிக் கொண்டோமே என்று திகைப்போம்!

அண்ணனின் ஆற்றலுக்கு—அருந் திறனுக்கு எண்ணற்ற சான்றுகளைச் சொல்லாம்.

குறுகுறுக்கும் விழிகளைக் கொண்ட இந்தப் பேரறிஞன் நம்மிடமில்லையே என்று இத்துணைக் கண்டத்து அரசியல் வாதிகள் எல்லாம் ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றனர். அத்தகு பெரு மேதையை—தென்னகத்து வழிகாட்டியை—நாம் தலைவராகப் பெற்றிருக்கிறோம்!

ஒப்பற்ற அப் பேரறிஞனுக்கு பிறந்த நாள் திருவிழாவென நாடு கொண்டாடுகிறது.

தென்னகத்துப் பெருமேதையை வாழ்த்தி நிற்பதில் உள்ள மகிழ்ச்சி அலாதியானது!

"பாரில் புகழ்மிக்க ஓர் தலைவன்
பண்புடைத் தென்னவன் நம் தலைவன்—சோர்
போரில் உயர்ந்தவர் அத்தலைவன்
செஞ்சுடரால் அவா வாழியவே!
நாடும் மொழியும் அவரிரு விழிகள்
நமது கழகம் அவர்தம் இதயம்-சீர்
பீடும் பெருமையும் அண்ணனின் பேச்சு
சிறப்புடன் தலைவன் வாழியவே!"

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகீம் சேட் தெரு, சென்னை-1